தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

| Vol: 02 | Issue: 236 | 4 Pages | 24.3.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 236 | 4 பக்கங்கள் | 24.3.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்**
**உற்றார்க் குடம்பும் மிகை**

**விளக்கம்:**
பிறவித் துன்பத்தைப் போக்க முயல்கின்றவர்க்கு உடம்பும் மிகையான பொருள் ஆகையால் அதற்கு மேல் வேறு தொடர்பு கொள்வது ஏனோ.

## பொது கழிப்பறையை பயன்படுத்த திருநங்கைகளுக்கு தடை விதித்த அமெரிக்க மாகாணம்

வாஷிங்டன், மார்ச்.24

அமெரிக்க மாகாணமான தெற்கு டகோட்டாவில் ஜூலை 1 முதல் பள்ளிகள்மற்றும்அரசுக்குச்சொந்தமானகட்டிடங்களில்திருநங்கைகள் பொது கழிப்பறையை பயன்படுத்துவதைத் தடுக்கும் புதிய சட்டம் அமலுக்கு வர உள்ளது.


அமெரிக்காவில் டிரம்ப் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பிறகு பல அதிரடி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன. முன்னதாக கடந்த ஜனவரியில் அவர் பதவிக்கு வந்ததில் இருந்து திருநங்கைகளின் உரிமைகளைக் குறைக்கும் நோக்கில் தொடர்ச்சியான நிர்வாக உத்தரவுகளில் அவர் கையெழுத்திட்டு வருகிறார்.

அந்தவகையில் அங்குள்ள தெற்கு டகோட்டா மாகாணத்தில் திருநங்கைகளுக்கு இந்த தடை விதிக்கப்பட்டு உள்ளது. இதனிடையே இந்த தடையானது வருகிற ஜூலை 1ந்தேதி முதல் அமலுக்கு வரும் என அம்மாகாண கவர்னர் லாரி ரோடன் தெரிவித்துள்ளார்.

திருநங்கைகள் அந்த வசதியைப் பயன்படுத்துவதைத் தடுக்க அதிகாரிகள் நியாயமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றால், பள்ளி அல்லது மாநிலத்திற்கு எதிராக அறிவிப்பு மற்றும் தடை உத்தரவு நிவாரணம் பெறவும் இந்த மசோதா அனுமதிக்கிறது.

அமெரிக்காவில் இந்த தடையை பிறப்பிக்கும் 13வது மாகாணம் இதுவாகும். டென்னசி, மொன்டானா மாகாணத்திலும் இந்த மசோதா கவர்னரின் ஒப்புதலுக்காக நிலுவையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் இருந்து 5¼ லட்சம் பேரை நாடு கடத்த நடவடிக்கை டிரம்ப் அதிரடி



வாஷிங்டன், மார்ச்.24

பொருளாதார ரீதியாகவும் வன்முறை, உள்நாட்டு போர் போன்ற காரணங்களாலும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள கியூபா, ஹைதி, நிகரகுவா, வெனிசுலா ஆகிய நாடுகளை சேர்ந்த மக்கள் வாழ்வாதாரம் தேடி கூட்டம் கூட்டமாக அமெரிக்காவில் குடிபெயர்ந்தனர். பெரும்பாலும் இவர்கள் சட்டவிரோதமாக எல்லையை கடந்து அமெரிக்காவுக்குள் நுழைந்தனர்.

இந்தபிரச்சினைக்குதீர்வுகாணவும்,அதேவேளையில்பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையிலும் ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான அரசு கடந்த 2022 அக்டோபரில் மனிதாபிமான அடிப்படையில் 'சி.எச்.என்.வி' என்ற திட்டத்தை செயல்படுத்தியது.

இந்தநிலையில் கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற டிரம்ப், 'சி.எச்.என்.வி' திட்டத்தின் கீழ் அமெரிக்காவில் குடிபெயர்ந்த மக்கள் அமெரிக்கர்களின் வேலைவாய்ப்புகளை பறிப்பதாக குற்றம் சாட்டி அந்த திட்டத்தை ரத்து செய்தார்.அதன் தொடர்ச்சியாக தற்போது, 'சி.எச்.என்.வி' திட்டத்தின் கீழ் அமெரிக்காவில் வசித்து வருபவர்களின் தற்காலிக குடியுரிமைக்கான சட்ட அந்தஸ்தை டிரம்ப் நிர்வாகம் ரத்து செய்துள்ளது.

இதன் மூலம் கியூபா, ஹைதி, நிகரகுவா மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளைசேர்ந்தசுமார்5லட்சத்து 32 ஆயிரம் பேர்ஏப்ரல் 24ந்தேதிக்கு பிறகு அமெரிக்காவில் தங்குவதற்கான சட்டப்பூர்வ அங்கீகாரத்தை இழக்கின்றனர். எனவே ஏப்ரல் 24ந்தேதிக்குள் அவர்கள் தாமாக தங்களின் நாடுகளுக்கு திரும்பாவிட்டால் அனைவரும் நாடு கடத்தப்படுவார்கள் என டிரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது.

## நைஜரில் பயங்கரவாத தாக்குதல்; 44 பேர் பலி



டகார், மார்ச்.24

நைஜர் நாட்டின் மேற்கே மாலி மற்றும் புர்கினா பசோ ஆகிய இரு நாடுகளின் எல்லையையொட்டிய கொகரவ்நகரத்திற்குஉட்பட்ட பம்பிடா கிராம பகுதியில் மசூதி ஒன்றில் முஸ்லிம்கள் பலர் நேற்று மதியம் இறைவணக்கத்தில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது, ஆயுதமேந்தய பயங்கரவாதிகள் சிலர் மசூதியை சூழ்ந்து கொண்டு தாக்குதல் நடத்தினர். இதில், 44 பேர் பலியானார்கள். 13 பேர்படுகாயமடைந்தனர்.இதனைஅந்நாட்டின்உள்துறைஅமைச்சகம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

இதனையடுத்து, 3 நாட்கள் தேசிய துக்க தினம் கடைப்பிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பே காரணம் என்றும் அமைச்சகம் தெரிவித்து உள்ளது. நைஜர், மாலி மற்றும் புர்கினா பசோ ஆகிய 3 நாடுகளும் சமீப ஆண்டுகளாக ராணுவ சதியை எதிர்கொண்டு வருகின்றன.

கிளர்ச்சியாளர்களின் ஆதிக்கம் அதிகரித்து உள்ள சூழலில், பல்வேறு தாக்குதல்கள் நடத்தப்பட்டு உள்ளன. இதில், பொதுமக்கள் பலர் பலியாகி உள்ளனர்.

# மு.க.ஸ்டாலினின் அரசியல் தலைமை பண்பு ஒன்றிய அரசியலில் புதிய உச்சத்தை தொட்டுள்ளது: தீர்மானங்கள் டெல்லியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது

சென்னை, மார்ச்.24

தொகுதி மறுசீரமைப்பு கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தின் மூலம் மு.க.ஸ்டாலினின் அரசியல் தலைமைப் பண்பு ஒன்றிய அரசியலில் புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது. கூட்டாட்சி அரசியலை ஒன்றிய அரசியலில் முக்கியமான பேசுபொருள் ஆக்கியுள்ளது. கூட்டு நடவடிக்கைக் குழுவின் தீர்மானங்கள் டெல்லியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் முதன்முறையாக, தமிழ்நாடு, கேரளா, ஆந்திரபிரதேசம், தெலங்கானா, கர்நாடகா, ஒடிசா, பஞ்சாப் ஆகிய ஏழு மாநிலங்கள் கூட்டாட்சி முறையைப் பாதுகாக்கவும், நியாயமான தொகுதி மறுசீரமைப்பு செயல்முறையைக் கோரியும் ஒன்றிணைந்துள்ளன. சென்னையில் நேற்று நடந்த முதல் கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டம் நடந்தது. இந்த முக்கியமான நிகழ்வு சமமான பிரதிநிதித்துவத்திற்கான போராட்டத்தில் குறிப்பிடத்தகுந்த தருணம் ஆகும்.

ஏனெனில், நாடாளுமன்றத்தில் தங்களின் குரலை பலவீனப்படுத்தும் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு எதிராகப் பல மாநிலங்கள் ஒன்றுபட்டுள்ளன. மார்ச் 5ம் தேதி தமிழகத்தில் 58 அரசியல் கட்சிகள் பங்கேற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தை தொடர்ந்து, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக விவாதிக்க,பலமாநிலமுதல்வர்களையும், அரசியல் கட்சி பிரதிநிதிகளையும் ஒருங்கிணைத்துள்ளார். இதன் மூலம் இந்த முக்கியமான பிரச்னையை குறித்து ஒன்றிய அளவில் ஒருமித்த கருத்தை மு.க.ஸ்டாலின் உருவாக்கியுள்ளார்.

இந்த கூட்டத்தில் பாதிக்கப்பட்ட ஆறு மாநிலங்களிலிருந்து 14 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒருங்கிணைந்த கூட்டத்தில் பங்கேற்ற முக்கியமானவர் கேரள முதல்வர் பினராயி விஜயன், தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான், கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமார், முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள்.



மக்கள்தொகை வளர்ச்சியை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்திய மாநிலங்களுக்கு தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கை நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தில், ஏற்படுத்தும் பாதகத்தை கூட்டு நடவடிக்கைக் குழு விவாதித்தது. அனைத்து மாநிலங்களும் நியாயமான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய வேண்டும், நாட்டின் கூட்டாட்சி முறையைப் பாதுகாக்க வேண்டும். வெளிப்படையான, சமத்துவமான அணுகுமுறையைக் கைகொள்ள வேண்டும் என கூட்டு நடவடிக்கைக் குழு வலியுறுத்தியது.

இந்த முக்கியமான அம்சங்களையும் விவாதங்களையும் கவனத்தில் கொண்டு, கூட்டு நடவடிக்கைக் குழுவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தின் மூலம் மு.க.ஸ்டாலினின் அரசியல் தலைமைப் பண்பு ஒன்றிய அரசியலில் புதிய உச்சத்தை தொட்டுள்ளது. கூட்டாட்சி அரசியலை ஒன்றிய அரசியலில் முக்கியமான பேசுபொருள் ஆக்கியுள்ளது. நியாயமான, வெளிப்படையான தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கை உறுதி செய்வதற்காக ஒன்றிணைந்த நடவடிக்கையின் தொடக்கத்தை கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டம் குறிக்கிறது.

வரவிருக்கும் நாட்களில், கூட்டு நடவடிக்கைக் குழு அரசியல் கட்சிகள், மக்கள் அமைப்புகள், பொது மக்கள் ஆகியோரிடையே ஒருமித்த கருத்தை உருவாக்கவும், சமமான பிரதிநிதித்துவ கோரிக்கையை வலுப்படுத்தவும் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இந்த தொடக்கம் தொகுதி மறுசீரமைப்பு பிரச்னையோடு முடிந்துவிடாது – இந்தியாவின் கூட்டாட்சி முறையை வலுப்படுத்தி, நாட்டின் ஜனநாயக கட்டமைப்பில் ஒவ்வொரு மாநிலத்தின் குரல் வலுவாக ஒலிக்க தேவையான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும்.

## கூடுதல் வகுப்பறை கட்டிடம் மற்றும் ஆய்வக கட்டடம் கட்டும் பணிகளுக்கு அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அடிக்கல் நாட்டி, பணியினை துவக்கி வைத்தார்கள்

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம்,பள்ளிக் கல்வித் துறை மூலம் கோவூர் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.21.86 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் மற்றும் ஆய்வக கட்டடம் கட்டும் பணிகளுக்கு சிறு குறு தொழில்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் செல்வப்பெருந்தகை அடிக்கல் நாட்டி,பணியினை துவக்கி வைத்தார்கள்.உடன் ஆட்சியாளர் கலைச்செல்வி மோகன்,முதன்மை கல்வி அலுவலகர் வெ.வெற்றிச்செல்வி தலைமை ஆசிரியர் வி.வீரலட்சுமி,தெற்கு ஒன்றிய செயலாளர், மாவட்ட ஒன்றிய குழு தலைவர் படப்பை மனோகரன்,மேற்கு ஒன்றிய செயலாளர் வந்தேமாதரம்,



குன்றத்தூர் ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றியகுழு துணைத் தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம்,மாங்காடு துணைத் தலைவர்ஜபருல்லா மற்றும் மாவட்ட கவுன்சிலர் அரி,கோவூர் தலைவர் சுதாகர், ஒன்றிய கவுன்சிலர் மருத்துவர் அன்பழகன், தி.க.பாஸ்கர், வசீகரன்,தேசிங்கு, முனுசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கோவூர் நகர கூட்டுறவு கடன் சங்க பேரவை கூட்டம்: அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு



காஞ்சிபுரம் மாவட்டம் கோவூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் கோவூர்நகரகூட்டுறவு கடன்சங்க பேரவை கூட்டம் நடைபெற்றது. இதில் கூட்டுறவு சார்பதிவாளர்கள் பிரேம்குமார், ராஜசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோவூர் நகர கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர் ஜெய்சங்கர் வரவேற்புரை ஆற்றி ஆண்டு அறிக்கை வாசித்தார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு விழா சிறப்புரை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் சரஸ்வதிமனோகரன்,

கொளப்பாக்கம் நகர கூட்டுறவு கடன் சங்க முன்னாள் இயக்குனர் வந்தேமாதரம், கோவூர் ஊராட்சி மன்ற தலைவர் சுதாகர், குன்றத்தூர் ஒன்றிய குழு உறுப்பினர் அன்பழகன், கோவூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஜமுனாராணி, முன்னாள் கூட்டுறவு கடன் சங்க தலைவர்கள் குமரவேல், கண்ணதாசன் மற்றும் கூட்டுறவு கடன் சங்கத்தின் அனைத்து வகுப்பு உறுப்பினர்கள், சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் நிர்வாக குழு உறுப்பினர்கள், மகளிர் சுய உதவி குழுக்களை சேர்ந்த பெண்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் கூட்டுறவு கடன் சங்க காசாளர் பரமேஸ்வரன், வெங்கடேஸ்வரன் ஆகியோர் நன்றி உரை வழங்கினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதியம் வடை, பாயாசத்துடன் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

## திருவுருவ சிலை அமைப்பிற்காக மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் சங்ககிரியில் கொங்கு வேளாளக் கவுண்டர்கள் சங்கம் முன்வைப்பு

சங்ககிரி: கொங்கு வேளாளக் கவுண்டர்கள் சங்கத்தின் சார்பில், இன்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் 12 மணி வரை சங்ககிரி நினைவுத்தூன் முன்பு மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு, சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவாக சங்ககிரியில் திருவுருவ சிலை அமைக்க வேண்டிய தேவையை வலியுறுத்தும் வகையில்



நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கொங்கு சி.சுகுமார், கொங்கு ஜெயபால் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டு உரையாற்றினர். மேலும், 600க்கும் மேற்பட்ட நிர்வாகிகள், ஆதரவாளர்கள், மற்றும் பொது மக்கள் இதில் உறுதியாக கலந்து கொண்டு ஆதரவை தெரிவித்தனர்.

இந்த திருவுருவ சிலை நிறுவம், வரலாற்று சிறப்புமிக்க தீரன் சின்னமலை அவர்களின் வீரத்தையும், தேசியத்திற்காக அவர் அளித்த தலைசிறந்த பங்களிப்பையும் நினைவூட்டும் என கூட்டத்தில் கலந்து கொண்டோர் வலியுறுத்தினர்.

## 70 ஆண்டுகள் பிறகு முதல்முறையாக அரசுப் பள்ளியில் ஆண்டு விழா

திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காடு ஒன்றிய உட்பட்ட புனிமாங்காடு வெங்கடாபுரம் கிராமத்தில் பள்ளி தொடங்கி 70 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக ஆண்டுவிழா நடைபெற்றது இதில் 30க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பாக நடனமாடியும் திருக்குறள் வாசித்த மாணவ செல்வங்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.



ஆந்திரா எல்லையும் தமிழக தொடக்கமான திருத்தணி அருகில் உள்ள ஊனி மாங்காடு வெங்கடாபுரம் கிராமத்தில் ஊராட்சி தொடக்கப் பள்ளியில் 70 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக ஆண்டுவிழா விமர்சையாக நடைபெற்றது இதில் கிராம மக்கள் முன்னாள் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஆண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# தமிழகத்தில் உள்ள கோயில்களில் பக்தர்கள் அதிகளவில் வரும் நாட்களில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்: அதிகாரிகளுக்கு அமைச்சர் சேகர்பாபு அறிவுறுத்தல்

சென்னை, மார்ச்.24

தமிழகத்தில் உள்ள கோயில்களில் பக்தர்கள் அதிக எண்ணிக்கையில் வரும் நாட்களில் சிறப்பு கவனம் செலுத்தி அலுவலர்கள் பணியாற்ற வேண்டும் என அமைச்சர் சேகர்பாபு அறிவுறுத்தினார். இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 33வது சீராய்வுக் கூட்டம் அமைச்சர் சேகர்பாபு தலைமையில் நடந்தது.




கூட்டத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், 2025 26ம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியகோயில்திருப்பணிகள் மற்றும் பக்தர்களுக்கான கூடுதல் மேம்பாட்டு பணிகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து, அமைச்சர் சேகர்பாபு பேசியதாவது: மண்டல இணை ஆணையர்கள் 15 நாட்களுக்கு ஒருமுறை தங்கள் பகுதியில் ஆய்வுக் கூட்டங்களைநடத்துவதோடு, வாரத்திற்கு 2 முறை நடைபெற்று வரும் திருப்பணிகளை களஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு மண்டல இணை ஆணையர்களுக்கு ரூ.25 லட்சம் மதிப்பீட்டிலான திருப்பணிகளுக்கு அவர்களே ஒப்புதல் தரலாம் என அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனை முழுமையாக பயன்படுத்தி திருப்பணிகளை விரைந்துமுடித்திடசிறப்பு கவனம் செலுத்தி பணியாற்றிட வேண்டும். அப்போதுதான் மக்களிடம் நமது துறைக்கும், தமிழக அரசுக்கும்இருக்கும்நன்மதிப்பு மென்மேலும் உயரும். அதேபோல், திருப்பணி கட்டுமானங்களின் தரத்தில் எவ்விதத்திலும் குறைவு ஏற்படாத வகையில் சிறந்த முறையில் பணிகள் நடைபெறுவதற்கு பொறியாளர்கள் முழுவீச்சில் பணியாற்ற வேண்டும்.

உயர்அலுவலர்கள்களத்திற்கு நேரடியாக வருகிறார்கள் என்றால்தான் அவருக்குகீழுள்ளஅனைவரும் களத்தில் நிற்பார்கள். ஆகவே நீங்கள் ரோல் மாடலாக முதலில் களத்தில் இறங்கி பணியாற்ற வேண்டும். கோயில்களில் அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வரும் நாட்களில் சிறப்பு கவனம் செலுத்தி அலுவலர்கள் பணியாற்ற வேண்டும். இந்தாண்டு ஒவ்வொரு மண்டலத்திலும் புதிதாக 100 கோயில்களை திருப்பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

எங்கு பார்த்தாலும் இறைப் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது என்ற நிலை தொடர வேண்டும். அடுத்த மாதம் 17ம் தேதி இந்து சமய அறநிலையத் துறை மானியக்கோரிக்கையில் அறிவிக்கப்பட வேண்டிய அறிவிப்புகள் அனைத்தும் சிறப்பானதாகவும், உடனடியாக பக்தர்களுக்கு பயனளிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

அதேபோல சட்டமன்றத்தில் அறிவிக்கப்படும் திட்டம் எதுவாக இருந்தாலும் அதனை ஓராண்டு காலத்திற்குள் முடித்திடும் வகையில் அலுவலர்கள் பணியாற்ற வேண்டும். அதற்கேற்றார் போல் செயல் திட்டங்களை வகுத்து அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என்றார். கூட்டத்தில் ஆணையர் ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் பழனி, திருமகள், ஹரிப்ரியா, தலைமைப் பொறியாளர் பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள் கலந்து கொண்டனர்.

# நியாயமான தொகுதி மறுசீரமைப்பையே கோரியுள்ளோம்: கனிமொழி எம்பி பேட்டி



சென்னை, மார்ச்.24

சென்னையில் தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு பின்னர் கனிமொழி எம்பி அளித்த பேட்டி: இந்திய அரசியல் வரலாற்றில் இந்த கூட்டம் ஒரு மைல்கல். இந்த கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் ஒத்த கருத்தை வலியுறுத்தியுள்ளனர். நியாயமான தொகுதி மறுசீரமைப்பை வலியுறுத்தி ஓரணியில் அனைவரும் திரண்டுள்ளனர். தொகுதி மறுசீரமைப்பு குறித்து வெளிப்படைத் தன்மையுடன்தெளிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

அதேபோல், தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையை 25 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்க வலியுறுத்தி கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேபோல் 1971ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையிலேயே தொகுதி மறுவரையறை செய்ய வேண்டும். அதேபோல் நாடாளுமன்றத்தில் மகளிருக்கான மசோதா நிறைவேற்றப்பட்டபின், அப்போது தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட்ட பின்நடைமுறைக்கு வரும் என்று தெளிவாக கூறியுள்ளனர். அதாவது விரைவில் தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட்டு, 33 சதவிகிதம் மகளிருக்கான இடஒதுக்கீடு மகளிருக்கு தரப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

அண்மையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசும் போது கூட, தொகுதி மறுசீரமைப்பால் தமிழ்நாட்டுக்கு பாதிப்பு வராது என்று கூறினார். அவரின் பதில் தெளிவாக இல்லாமல் குழப்பமாக அமைந்திருக்கிறது. அதேபோல் நாங்கள் வடக்கு, தெற்கு என்று பிரிவினையை ஏற்கவில்லை. நாங்கள் எங்களின் உரிமையை மட்டுமே கேட்கிறோம். எங்களின் உரிமையை கேட்பது உங்களுக்கு எதிராக பேசுவது அல்ல. ஆனால் தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் சிலர் பாதிப்பை சந்திக்கவும், சிலர் ஆதாயம் அடைவதையும் ஏற்க முடியாது.

நியாயமான தொகுதி மறுசீரமைப்பையே நாங்கள் அனைவரும் கோரியுள்ளோம். மக்கள் தொகை கட்டுப்பாட்டு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியவர்கள் பாதிப்புகளை சந்திக்க கூடாது என்பதே எங்களின் நோக்கம். மக்கள் தொகையை கட்டுப்படுத்தியதற்காக தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப், கர்நாடகா, தெலங்கானா மாநிலங்கள் பாதிப்பை சந்திக்க கூடாது. இதனால் 25 ஆண்டுகளுக்கு தொகுதி மறுசீரமைப்பை நிறுத்தி வைக்க கோரிக்கை வைத்துள்ளோம். விரைவில் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான தொடர் நடவடிக்கைகளுக்கான குழு அமைக்கப்படும்.

அடுத்த கூட்டம் ஐதராபாத்தில் நடத்தப்படும். அதேபோல் தமிழக பாஜ மட்டுமல்லாமல் தேசிய பாஜவும் சேர்ந்து தமிழ்நாட்டுக்கு எதிரான கருத்துகளை தான் முன்வைத்து வருகிறார்கள். நிதி, மாநில உரிமை தொடர்பாக தொடர்ந்து போராட வேண்டிய நிலையில் உள்ளோம். நமது பிரதிநிதித்துவம் குறைந்தால்இன்னும்பிரச்னைகள் வரும். பாஜ தமிழக மக்களுக்கும், தமிழ் உணர்வுக்கும், தமிழ்நாட்டுக்கும் எதிரானவர்கள். அந்த நிலைப்பாட்டையே எடுத்துள்ளார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சசிகலாவை அதிமுகவில் சேர்க்க புது ஐடியா பணத்தாசையை காட்டி எடப்பாடிக்கு நெருக்கடி: கூட இருந்தே குழி பறிக்க காத்திருக்கும் கும்பல்

சேலம், மார்ச்.24

சசிகலாவை கட்சியில் சேர்க்க பணத்தாசையை காட்டி எடப்பாடிக்கு புதிய நெருக்கடியை மூத்த நிர்வாகிகள் கொடுத்து வருகின்றனர். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுக நான்கு பிரிவுகளாக பிரிந்துவிட்டது. ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரன், சசிகலா ஆகியோர் தனித்தனியாக அதிமுகவுக்கு சொந்தம் கொண்டாடி வந்த நிலையில், அதிமுகவின்பொதுச் செயலாளர் பதவியை எடப்பாடி பழனிசாமி தட்டிப்பறித்துக் கொண்டார். அந்தநேரத்தில் எடப்பாடி பழனிசாமிக்கு கொங்கு மண்டலத்தை சேர்ந்த வேலுமணி, தங்கமணி, தர்மபுரி கே.பி.அன்பழகன், சி.வி.சண்முகம், செங்கோட்டையன் ஆகியோர் மிகவும் துணையாக இருந்தனர்.

கட்சியை வளர்ச்சிப்பாதைக்கு கொண்டு செல்லும் வகையில் எடப்பாடி பழனிசாமி பல்வேறு நடவடிக்கைகளில் இறங்கினார். முதற்கட்டமாக 2 சட்டமன்ற தொகுதிக்கு ஒரு மாவட்ட செயலாளரை கொண்டு வர முடிவு செய்தார். இதன்மூலம் அத்தொகுதியிலேயே அவர்களுக்கு ஒரு சீட் கொடுப்பதன் மூலம் மிகுந்த ஆர்வமுடன் கட்சி வேலையில் ஈடுபடுவார்கள். இதை வைத்து ஆட்சியை பிடித்துவிடலாம் என திட்டமிட்டார். ஆனால் இதற்கு மூத்த நிர்வாகிகள் பலரும் ஒத்துழைக்கவில்லை.

குறிப்பாக கொங்கு பகுதியை சேர்ந்த மூத்த நிர்வாகிகள், இதற்கு உடன்படவில்லை. தங்களின் செல்வாக்கை குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக நினைத்தனர். இதனால் எடப்பாடி பழனிசாமியால் நினைத்ததை செய்ய முடிவில்லை. இவர்களை எதிர்த்தால் கட்சியில் பல இன்னல்களை சந்திக்க நேரிடும் என நினைத்து மாவட்ட செயலாளர் நியமன முடிவை கைவிட்டுவிட்டார். அடுத்ததாக பாஜவை அதிமுக கூட்டணியில் சேர்க்க வேண்டும் என்பதோடு இல்லாமல் ஓ.பன்னீர் செல்வத்தையும், சசிகலாவையும் கட்சியில் இணைத்தே ஆக வேண்டும் என்பதில் கொங்கு நிர்வாகிகள் உறுதியாக இருக்கிறார்கள்.

வரும் சட்டமன்ற தேர்தலை சந்திக்க போதிய பணம் தங்களிடம் இல்லை என எடப்பாடி பழனிசாமியிடம் கைவிரித்து விட்டனர். சசிகலாவை கட்சியில் சேர்ப்பதன் மூலம் தேர்தலுக்கான செலவுகளை அவரே கவனித்துக்கொள்வார். அதில் எந்த பிரச்னையும் நமக்கு கிடையாது என வேலுமணிதரப்பினர்தெரிவித்துவிட்டதாககூறப்படுகிறது. சசிகலா மற்றும் ஓ.பன்னீர்செல்வத்தை கட்சியில் இணைத்தால் அவர்கள் குடைச்சல் கொடுப்பதுடன் பதுக்கி வைத்திருக்கும் பணத்தை வைத்து நிர்வாகிகள் அனைவரையும் விலைக்கு வாங்கி விடுவார்கள்.

நமது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என எடப்பாடி தெரிவித்தும் அதுபோன்று எதுவும் நடக்காது என உறதி கூறியுள்ளனர்.

இதனால் எந்த முடிவையும் எடுக்க முடியாமல் எடப்பாடி பழனிசாமி தவித்து வருகிறார். இதற்கிடையில் எந்த வம்பு தும்புக்கும் போகாத செங்கோட்டையனை களம் இறக்கியதும் கொங்கு மண்டல நிர்வாகிகள் என்பது எடப்பாடி பழனிசாமிக்கு தெரிந்துபோனது. இப்போதே எடப்பாடி பழனிசாமிக்கு நெருக்கடி கொடுத்து தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளனர்.

இதுகுறித்து அதிமுக மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகையில், ''அதிமுகவில் புதியபதவிகளைகொண்டு வந்து புதுரத்தம் பாய்ச்ச வேண்டும் என பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முயற்சிகள் மேற்கொண்டார். ஆனால் மூத்த நிர்வாகிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அதையும் மீறி நிர்வாகிகளைநியமித்தால் கோஷ்டி மோதல் ஏற்படும். ஆங்காங்கே பிரச்னையை கிளப்பி விடுவார்கள்.

தன்னுடன் இருப்பவர்களில் உண்மையாக இருப்பது யார்? குழி பறிப்பவர்கள் யார்? என்பதை எடப்பாடி தெரிந்து வைத்துள்ளார். என்றாலும் அவரால் எந்த முடிவையும் எடுக்கமுடியாமல்தவித்து வருகிறார்,'' என்றார்.

# இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ராமேஸ்வரம் மீனவர்கள் 11 பேர் சென்னை வந்தனர்

சென்னை, மார்ச்.24

இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட ராமேஸ்வரம் மீனவர்கள் 11 பேர் சென்னை வந்தனர். விமான நிலையத்தில் தமிழ்நாடு மீன்வளத்துறை அதிகாரிகள் வரவேற்று, அரசு ஏற்பாடு செய்திருந்த வாகனம் மூலம் ராமேஸ்வரம் அனுப்பி வைத்தனர். ராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த பிப்ரவரி மாதம் 2, 19, 23 ஆகிய நாட்களில், 3 விசைப்படகுகளில் தனித் தனியே, மொத்தம் 11 மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க சென்றிருந்தனர்.



இவர்கள் ராமேஸ்வரம் பகுதியில், இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடலோர காவல்படை ரோந்து கப்பல் வந்து 3 விசைப்படகுகளையும் சுற்றி வளைத்து, அதிலிருந்த 11 மீனவர்களையும் கைது செய்து இலங்கைக்கு கொண்டு சென்றனர். இலங்கை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 11 மீனவர்களையும் இலங்கை சிறையில் அடைத்தனர். இந்நிலையில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனே விடுதலை செய்ய, இலங்கை அரசுடன், ஒன்றிய அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று, ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு அவசர கடிதம் எழுதினார்.

இதையடுத்து இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள், இலங்கை அரசு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இநநிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு, இலங்கை நீதிமன்றம் ராமேஸ்வரம் மீனவர்கள் 11 பேரையும் விடுதலை செய்தனர். பின்னர் தூதரக அதிகாரிகள், மீனவர்களை விமானம் மூலம், சென்னைக்கு அனுப்பினர். சென்னை விமான நிலையத்தில், மீன்வளத்துறை அதிகாரிகள் மீனவர்கள் 11 பேரையும் வரவேற்று, அரசு ஏற்பாடு செய்திருந்த வாகனம் மூலம், ராமேஸ்வரம் அனுப்பி வைத்தனர்.

# ஆம்னி பஸ்சில் கடத்திய தங்கம், அமெரிக்க டாலர் பறிமுதல்

பவானி, மார்ச்.24

தெலங்கானா மாநிலம், ஐதராபாத்திலிருந்து கோவைக்கு செல்லும் தனியார் ஆம்னி பஸ்சில், தங்கம் கடத்தி செல்லப்படுவதாக ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்துக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதன்பேரில், சித்தோடு போலீசார் ஈரோடு மாவட்ட எல்லையான லட்சுமி நகரில் நேற்று வாகன சோதனையில் ஈடுபட்டனர். சேலம்கோவை தேசிய நெடுஞ்சாலை வழியாக வந்த தனியார் ஆம்னி பஸ்சில் சோதனையிட்டபோது அதில் கடத்தி வரப்பட்ட, அரை கிலோ எடையுள்ள 5 தங்க பிஸ்கட் மற்றும் ரூ.18 லட்சம் மதிப்புள்ள அமெரிக்க டாலர்கள் கைப்பற்றப்பட்டது.



விசாரணையில், கோவை, சிங்காநல்லூரை சேர்ந்த புகழ்வாசன் (50) என்பவர் ஐதராபாத்தில் மூவரை ஏமாற்றி, தங்க பிஸ்கட்களை வழிப்பறி செய்து, அதனைக் கோவைக்கு கடத்தி செல்வது தெரியவந்தது. இதையடுத்து, புகழ்வாசனைக் கைது செய்த போலீசார், தங்க பிஸ்கட், அமெரிக்க டாலர்கள் மற்றும் 4 செல்போன்கள் பறிமுதல் செய்தனர். இது குறித்த தகவலின் பேரில் தெலங்கானா மாநில போலீசார் சித்தோட்டிற்கு வருகின்றனர்.

# குற்றவாளிகளுக்கு ஆதரவாக போலீஸ் என குற்றச்சாட்டு 'அடுத்த டார்கெட் நான்தான்': கொலையான மாஜி எஸ்ஐ மகனின் புதிய வீடியோ வைரல்

நெல்லை, மார்ச்.24

நெல்லை டவுனில் கொலையான மாஜி எஸ்ஐ.யின் மகன் பரபரப்பு வீடியோ வெளியிட்டுள்ளார். அதில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக காவல் துறையில் சிலர்செயல்படுவதாக குற்றம்சாட்டி உள்ளார். நெல்லை டவுன் தொட்டிப்பாலத் தெருவை சேர்ந்தவர் ஜாகீர் உசேன் பிஜிலி (60). ஓய்வுபெற்ற சப் இன்ஸ்பெக்டரான இவர், கடந்த 18ம் தேதி அதிகாலை காட்சி மண்டபம் பகுதியில் 3 பேர் கும்பலால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இதுகுறித்து டவுன் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இச்சம்பவத்தில் தொடர்புடையகார்த்திக், அக்பர்ஷா ஆகியோர் நெல்லை கோர்ட்டில் சரணடைந்தனர்.





ரெட்டியார்பட்டி பகுதியில் பதுங்கியிருந்த கிருஷ்ணமூர்த்தி என்ற முகமது தவுபிக்கை போலீசார் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர். கொலைக்கு உடந்தையாக இருந்த அவரது மனைவி நூர் நிஷா திருவனந்தபுரத்தில் தலைமறைவாக இருப்பதாக கூறப்படுகிறது. அவரை தனிப்படையினர் தேடி வருகின்றனர். சரணடைந்த கார்த்திக், அக்பர்ஷா ஆகியோரை 2 நாள் காவலில் எடுத்து போலீசார் விசாரணை நடத்தினர். அவர்கள், நெல்லை டவுனில் உள்ள இடத்தை நாங்கள்அனுபவம்செய்ய ஜாகீர் உசேன் பிஜிலி தொடர்ந்து தடையாக இருந்ததுடன், எங்களுக்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தியதால் வெட்டிக் கொன்றதாக வாக்குமூலம் அளித்திருப்பதாக போலீசார் தெரிவித்தனர்.

இந்நிலையில் ஜாகீர் உசேன் பிஜிலியின் மகன் இச்சூர் ரகுமான் பிஜிலி, சமூக வலைதளங்களில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: அடுத்த டார்கெட் நான் என எண்ணத்தோன்றுகிறது. எனது அப்பாகொலை சம்பவத்தில் எப்படி வீடியோ பயன்பட்டதோ அதுபோல் எனக்கும் நான் இப்போது எடுக்கும் இந்த வீடியோவும் பயன்படும். காரணம் நான் வீட்டில் இருக்கும்போது மர்ம நபர் ஹெல்மட் அணிந்து கொண்டு வீடியோ எடுத்தார். நான் வெளியே வந்ததும் அவர் அங்கிருந்து சென்று விட்டார்.

அவர் யாரென்றே தெரியவில்லை. சாவை நினைத்து பயப்படவில்லை. சாவிற்குப் பிறகான இருக்கும் பொறுப்பை நினைத்து பயப்படுகிறேன். இப்படிச் சொல்லக் காரணம் எனது அப்பா கொலை சம்பவத்தில் தொடர்புடைய 4வது குற்றவாளி இதுவரை போலீசாரால் கைது செய்யப்படவில்லை. அவர் வெளியே இருந்தால் ஜாமீனுக்கு மனு அளிப்பார். சாட்சிகளை கலைப்பார். அவரை எப்போது காவல் துறை கைது செய்யப்போகிறது?. அவரை பிடிக்க தாமதமாவது குற்றவாளிகளுக்கு போலீசார் ஆதரவாக செயல்படுவதாகத் தெரிகிறது. உடலை வாங்க மாட்டோம் என நிபந்தனை விதித்ததாலேயே கிருஷ்ணமூர்த்தியை கைது செய்து. உதவி கமிஷனரை சஸ்பெண்ட் செய்தீர்கள். உதவி கமிஷனர் கடந்த 2022ம் ஆண்டு நாமக்கலில் பணிபுரியும் போது இதுபோன்று ஒரு நபர் மீது பிசிஆர் வழக்கு தொடர்ந்து அது நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து இதே வேலையை அவர் செய்து வருகிறார். அவரை டிஸ்மிஸ் செய்ய வேண்டும்.

2018ல் இருந்தே இப்பிரச்னை தொடருகிறது. எந்த ஆட்சியையும் குறை சொல்லவில்லை. தவறு செய்யும் அதிகாரிகளை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம். அதிகாரிகளை காப்பாற்றும் முயற்சி எடுத்தால் அதுவே அரசுக்கு கெட்டப் பெயரைப் பெற்றுத் தரும். 4வது குற்றவாளியை கைது செய்யவில்லை என்றால் இந்த வழக்கு நீர்த்துப்போகும்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

ஜாகீர் உசேன் பிஜிலி கொலை வழக்கு தொடர்பாக கிருஷ்ணமூர்த்தி என்ற முகமது தவுபிக்கின் உறவினரான 17 வயது சிறுவனை பிடித்து போலீசார் விசாரணை நடத்தினர். இதில் அவர் செல்லும் இடங்களைகண்காணித்து கொலையாளிகளுக்கு தகவல் அளித்தது தெரிய வந்தது.

சம்பவத்தன்று அதிகாலையில் அவர், பள்ளிவாசலுக்கு தொழுகைக்கு சென்றதையும், பள்ளிவாசலில் இருந்து வெளியே வருவதையும் படம் பிடித்து செல்போனில் அனுப்பியதும் தெரிந்தது. இதையடுத்து சிறுவனை கோர்ட்டில்ஆஜர்படுத்திநெல்லை புதிய பஸ் நிலையம் அருகேயுள்ள சிறுவர் சீர்திருத்தப்பள்ளியில் சேர்த்தனர். கைதான சிறுவன், நெல்லை டவுனில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளியில் பிளஸ்1 படித்து வருவது குறிப்பிடத்தக்கது. எஸ்ஐயின் மகன் வெளியிட்ட வீடியோ சமூக வலைதளங்களில் வைரலான நிலையில், நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதிமணி உத்தரவின் பேரில் டவுன் உதவி கமிஷனர் அஜீக்குமார் விசாரணை நடத்தினார். இதைத் தொடர்ந்து ஜாகீர் உசேன் வீட்டுக்கு துப்பாக்கி ஏந்திய 2 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் 6 இடங்களில் துப்பாக்கி போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பொன்னேரி அருகே பெருஞ்சேரியில் முதல்வர் பங்கேற்க உள்ள விழாவுக்கு மேடை இடத்தை அமைச்சர் ஆய்வு

பொன்னேரி, மார்ச்.24

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தொகுதிக்கு உட்பட்ட பெருஞ்சேரி கிராமத்தில், ஏப்ரல் 19ம்தேதி மாவட்ட வருவாய்த்துறை சார்பில், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர், திருத்தணி, ஆவடி மற்றும் பூந்தமல்லி தொகுதிகளில் வசிக்கும் ஒரு லட்சம் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா உள்பட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுகிறது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். இந்த நிலையில், நிகழ்ச்சிக்காக பிரமாண்ட மேடை அமைக்கப்பட உள்ளது. இதற்காக பெருஞ்சேரி கிராமத்தில் உள்ள இடத்தை அமைச்சர் சா.மு.நாசர், திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் மு.பிரதாப், எம்எல்ஏக்கள் பொன்னேரி துரை சந்திரசேகர், கும்மிடிப்பூண்டி டி.ஜெ.கோவிந்தராஜன், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் எம்எஸ்கே.ரமேஷ்ராஜ் ஆகியோர் நேற்று பார்ரவையிட்டனர். அங்கு வாகனங்கள் நிறுத்துமிடம், பொதுமக்கள்சிரமமின்றி நிகழ்ச்சியை கண்டுகளிக்க பந்தல் அமைக்கும் பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர். அப்போது செங்குன்றம் துணை காவல் ஆணையர்பாலாஜி, பொன்னேரி உதவி ஆணையர் சங்கர், பொன்னேரி தாசில்தார் சிவகுமார், மாவட்ட திமுக அவைத்தலைவர் மு.பகலவன், சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வசேகரன் உள்பட பலர் இருந்தனர்.

# பிரான்ஸ் பெண் பலாத்காரம் எதிரொலி; திருவண்ணாமலையில் சுற்றுலா வழிகாட்டிகள் விவரம் சேகரிப்பு

திருவண்ணாமலை, மார்ச்.24

திருவண்ணாமலைக்கு வரும் வெளிநாட்டினர், இங்குள்ள தனியார் தங்கும் விடுதிகள், ஹோம் ஸ்டே எனப்படும் வாடகை வீடுகள், ஆசிரமங்கள் போன்ற இடங்களில் வெளி நாட்டினர் தங்குகின்றனர். குறிப்பாக, கிரிவலப்பாதையில் அத்தியந்தல், ஆணாய்பிறந்தான் போன்ற ஒதுக்குப்புறமான பகுதிகளில் உள்ள சொகுசு பங்களாக்கள் வெளிநாட்டினர் விரும்பி தங்கும் இடமாக மாறியிருக்கிறது. இந்நிலையில், திருவண்ணாமலைக்கு ஆன்மிக சுற்றுலா பயணியாக வந்திருந்த பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த 30வயது இளம் பெண்ணை, கடந்த 18ம் தேதி தியானம் செய்யலாம் என தீபமலைமீது அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்ட சுற்றுலா வழிகாட்டி வெங்கடேசன் கைது செய்யப்பட்டார். எனவே, திருவண்ணாமலையில் சுற்றுலா வழிகாட்டிகள் (டூரிஸ்ட் கைடு) எனும் பெயரில் வெளிநாட்டினர் மற்றும் வெளி மாநிலத்தினரை குறிவைக்கும் நபர்கள் குறித்த விபரங்களை போலீசார் சேகரித்து வருகின்றனர். மேலும், அவர்களுடைய முழுமையான விபரங்களை சம்மந்தப்பட்ட காவல் நிலையங்களில் பதிவு செய்து வைக்கவும், தொடர்ந்து கண்காணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல், திருவண்ணாமலையில் தங்கியிருக்கும் வெளிநாட்டினரின் முழுமையான விபரங்களையும் போலீசார் சேகரித்து வருகின்றனர். வெளிநாட்டினர் தங்கியிருக்கும் விபரங்களை, சம்மந்தப்பட்ட போலீஸ் ஸ்டேஷனில் தங்கும் விடுதி மற்றும் வீட்டு உரிமையாளர்கள், ஆசிரம நிர்வாகிகள்தெரிவிக்கவேண்டும் என்ற விதிமுறையை முறையாக பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், விசா காலம் முடிந்த பிறகும் அனுமதியின்றி வெளிநாட்டினர் யாராவது திருவண்ணா மலையில் தங்கியுள்ளனரா என்ற விபரங்களை தனிப்பிரிவு போலீசார் சேகரித்து வருகின்றனர். அதோடு, வெளி நாட்டினர் தங்கும் பகுதிகளில் கூடுதல் கண்காணிப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மலை மீது செல்ல பொதுமக்களுக்கு அனுமதியில்லை. மலைப்பகுதி தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், வெளிநாட்டினரை மலைமீது அழைத்துச் செல்லும் சம்பவங்கள் = நடக்கிறது. எனவே, அதை தடுக்கவும், வனத்துறையுடன் இணைந்து போலீசார் தீவிர கண்காணிப்புக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

# பிரதமர் மோடி பங்கேற்கிறார்; பாம்பன் புதுப்பாலத்தின் திறப்பு விழா எப்போது? தெற்கு ரயில்வே கூடுதல் பொதுமேலாளர் பேட்டி

ராமேஸ்வரம், மார்ச்.24

ராமேஸ்வரம் அருகே பாம்பன் கடலில் ரூ.535 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மின்சார ரயில் பாலம் பணிகள் முழுமையாக நிறைவு பெற்று, இரண்டு மாதங்களுக்கு மேலாக திறப்பு விழாவிற்கு காத்திருக்கிறது. இதனிடையே ரயில்வே நிர்வாகம் சார்பில் பல்வேறு ஆய்வுகளும், திறப்பு விழா ஒத்திகை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இதன் அடிப்படையில் இம்மாதத்தில் புதிய ரயில் பாலம் பயன்பாட்டுக்கு வரும் என பெரும் எதிர்பார்ப்பில் இருந்த அனைத்து தரப்பு மக்களும் ஏமாற்றம் அடைந்தனர்.

புதிய ரயில் பாலம் திறப்பு விழா தொடர்பான ஏற்பாடுகள் குறித்து தெற்கு ரயில்வே கூடுதல் பொது மேலாளர் கவுசல் கிஷோர் தலைமையில் நேற்று ஆய்வு நடைபெற்றது. ரயில் பெட்டியில் காலையில் மண்டபம் ரயில் நிலையம் வந்த அவர், மண்டபம் முகாம் ஹெலிபேட் தளத்தை ஆய்வு செய்தார். அடுத்து பாம்பன்சாலை பாலத்தில் இருந்து புதிய ரயில் பாலத்தை பார்வையிட்டு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அதன் பின்னர் ராமேஸ்வரம் பேருந்துநிலையம்அருகே சுற்றுலாத்துறை கட்டுப்பாட்டில் இயங்கி வரும் ஆலயம் விடுதி வளாகத்தை பார்வையிட்டு, மேடை நிகழ்ச்சி நடக்க இருக்கும் இடத்தை வரைபடங்களுடன் ஆய்வு செய்தார். தொடர்ந்து பாம்பன் குந்துகால் விவேகானந்தர் மணி மண்டபத்தை பார்வையிட்டார்.

பின்னர் தெற்கு ரயில்வே கூடுதல் பொது மேலாளர் கவுசல் கிஷோர் அளித்த பேட்டியில், ''புதிய ரயில் பாலம் திறப்பு குறித்த உறுதியான தேதி விரைவில் வெளிவரும். பிரதமர் மோடி கலந்து கொள்ள உள்ளதால், அதற்கான முன்னேற்பாடுகளை செய்து வருகிறோம். புதிய பாலத்திற்கு அப்துல் கலாம் பெயர் சூட்டும் திட்டம் இல்லை'' என்றார். ஆய்வில் மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் சரத் □வஸ்தவா, ராமநாதபுரம் எஸ்பி சந்தீஷ், முதுநிலை கோட்ட பொறியாளர் சந்தீப் பாஸ்கர், முதுநிலை கோட்ட ரயில் இயக்க மேலாளர் பிரசன்னா, முதுநிலை கோட்ட வர்த்தக மேலாளர் டி.எல். கணேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

# எஸ்ஏ. கலை, அறிவியல் கல்லூரியில் புற்றுநோய் விழிப்புணர்வு மனித சங்கிலி நிகழ்ச்சி



திருவள்ளூர், மார்ச்.24

சென்னை அருகே திருவேற்காட்டில் உள்ள எஸ்.ஏ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ரெட் ரிப்பன் கிளப் கல்லூரி தாளாளர் ப.வெங்கடேஷ் ராஜா உத்தரவின்படி, புற்றுநோய் விழிப்புணர்வு மனித சங்கிலி நடைபெற்றது. புற்றுநோயை முன் கூட்டியே கண்டறிந்து ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்வதற்கான முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் நோக்கில் மனித சங்கிலி நடைபெற்றது. இதில் 60 க்கும் மேற்பட்ட மாணவர்கள், பேராசிரியர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

புற்றுநோயின் ஆபத்து காரணிகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய துல்லியமான தகவல்களை பரப்புதல், ஆரம்ப பரிசோதனை மற்றும் சரியான நேரத்தில் மருத்துவ ஆலோசனையை ஊக்குவித்தல், சுகாதாரமான மற்றும் பொறுப்பான வாழ்க்கை முறையை தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றை பற்றிய விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் ஏந்தி சென்றனர்.

புற்றுநோயியல் நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார வல்லுநர்கள் புற்றுநோய்த் தடுப்பு ஆரம்ப அறிகுறிகள் மற்றும் சிகிச்சை முன்னேற்றங்கள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கினர். புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதாக மாணவர்கள் முறையான உறுதிமொழி எடுத்து, மாணவர்கள் தமது சமூக அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினர். புற்றுநோய்த் தடுப்பு மற்றும் ஸ்கிரீனிங் வழிகாட்டுதல்கள் குறித்த தகவல்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஆஜராகாத செங்கல்பட்டு ஆட்சியருக்கு எதிராக வாரண்ட் பிறப்பித்தது ஐகோர்ட்

சென்னை, மார்ச்.24

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஆஜராகாத செங்கல்பட்டு ஆட்சியருக்கு எதிராகஐகோர்ட்வாரண்ட் பிறப்பித்தது. மதுராந்தகம் தாலுகா ஆனைகுன்றத்தில், கிராம உதவியாளராக இருந்த முனுசாமி கடந்த 2001ம் ஆண்டு மரணமடைந்தார். முனுசாமியின் மகன் ராஜகிரி, கருணை அடிப்படையில் வேலை வழங்கக் கோரி உயர்நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். மனுவை விசாரித்த ஐகோர்ட், 3 மாதங்களில் ராஜகிரிக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க 2023ல் உத்தரவிட்டிருந்தது. உத்தரவை அமல்படுத்தவில்லை எனக் கூறி ராஜகிரி, 2024ம் ஆண்டு நீதிம ன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்தார். செங்கல்பட்டு ஆட்சியர் நேரில் ஆஜராக உத்தரவிட்டு, நீதிபதி எம். எஸ்.ரமேஷ் சட்டப்பூர்வ நோட்டீஸ் பிறப்பித்தார். வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, ஆட்சியர் ஆஜராகாததால், ஜாமீனில் வெளிவரக்கூடிய வாரண்ட் பிறப்பி ப்பிக்க ப்பட்டது. வழக்கு விசாரணையை ஏப்ரல் 4ம் தேதிக்கு ஒத்திவைத்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# நீலகிரியில் பூத்துகுலுங்கும் ஜெகரண்டா மலர்கள்: சுற்றுலா பயணிகள் ரசிப்பு



ஊட்டி, மார்ச்.24

நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் தற்போது ஜெகரண்டா மலர்கள் பூத்துள்ளதால், இதனை சுற்றுலா பயணிகள் ரசித்து செல்கின்றனர். நீலகிரி மாவட்டம் மலை மாவட்டம் என்பதால், பல்வேறு சோலை மரங்களில் அவ்வப்போது மலர்கள் பூத்து குலுங்கும். பெரும்பாலான பகுதிகளில் தேயிலை தோட்டங்கள் மற்றும் சாலையோரங்களில்பல்வேறுவகையான சோலை மரங்களில் மலர்கள் பூக்கும். குறிப்பாக, நீல நிறத்தில் ஜெகரண்டா மலர்கள், சிவப்பு நிறத்தில் சேவல் கொண்டை மலர்கள் சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகிறது.

தற்போது மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சாலையோரங்கள் மற்றும் தேயிலை தோட்டங்களில் நீல நிறத்தில் ஜெகரண்டா மலர்கள் பூத்துள்ளன. பொதுவாக இவை மார்ச் மாதம் இறுதி வாரத்தில்பூத்துகுலுங்கும். இம்முறை சற்று முன்னதாக பூத்துள்ளன. மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும், பூத்துள்ள இந்த மலர்களை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வது மட்டுமின்றி அதன் அருகே நின்று புகைப்படம் எடுத்து செல்கின்றனர்.

# எங்க கிட்ட வேலை செஞ்சவரு.. பாவம் அந்த ஆளு... விட்டுடுங்க! அண்ணாமலையை கலாய்த்த கர்நாடக துணை முதல்வர்



சென்னை, மார்ச்.24

கருப்பு கொடி காட்டி எதிர்ப்பு தெரிவித்த தமிழக பாஜ தலைவர் அண்ணாமலையை, 'பாவம் அந்த ஆளு... விட்டுடுங்க' என கர்நாடகாதுணைமுதல்வர் டி.கே.சிவக்குமார் கிண்டல் செய்துள்ளார். தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக சென்னையில் நேற்று திமுக நடத்திய கூட்டு குழு கூட்டத்தில் பங்கேற்க கேரளா முதல்வர், கர்நாடகா துணைமுதல்வர், ஆந்திரா முன்னாள் முதல்வர் உள்ளிட்டோர் சென்னை வந்தனர். அப்போது தமிழ்நாட்டைவஞ்சிக்கும் கேரளா, கர்நாடகா மாநிலங்களின் முதல்வர்கள் சென்னை வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாஜ சார்பில் தமிழகம் முழுவதும் கருப்பு கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பாஜவின் கருப்பு கொடி ஆர்ப்பாட்டம் குறித்து சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடக துணைமுதல்வர் டி.கே. சிவகுமார், "பாஜவின் கருப்பு கொடி போராட்டத்தை வரவேற்கிறேன். அந்த அதிகாரி (அண்ணாமலை) பாவப்பட்ட மனிதர். எங்கள் கர்நாடக மாநிலத்தை சேர்ந்தவர். அவர் கர்நாடகாவில் ஐபிஎஸ் அதிகாரியாக இருந்தபோது எங்களுக்கு வேலைசெய்தார். எனவே, அண்ணாமலைக்குஎங்கள் பலம் தெரியும். அவர் வேலையை அவர் செய்யட்டும். விட்டுவிடுங்கள்.

அவருக்கு என் வாழ்த்துகள்" என்றார். இதற்கு எக்ஸ் தளத்தில் பதிலளித்துள்ள அண்ணாமலை, ''ஆமாம், நான் காவல்துறை அதிகாரியாக இருந்தபோது கர்நாடக மக்களுக்கு விடாமுயற்சியுடன் சேவை செய்துள்ளேன். அதை குறிப்பிட்டு சொன்னதற்கு நன்றி. மேலும், இந்தபாவப்பட்ட மனிதருக்கு வாழ்த்து கூறியதற்கும் மிக்க நன்றி. சித்தராமையாவை கவிழ்த்துவிட்டு கர்நாடகா முதல்வராக முயற்சிக்கும் உங்களுக்கு என் நல்வாழ்த்துக்கள்'' என கூறி உள்ளார்.

# மான் வேட்டையை தடுத்த வனக்காப்பாளர் மீது துப்பாக்கி சூடு: தொழிலாளி கைது



சின்னசேலம், மார்ச்.24

சின்னசேலம் அருகே மான்வேட்டையைதடுக்க சென்ற வனக்காப்பாளர் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகே அரசு ஆட்டுப்பண்ணையை ஒட்டிய பாக்கம் பாடி வனப்பகுதியில் நேற்று முன்தினம் 2 பேர் துப்பாக்கியுடன் சென்று மான் வேட்டையில் ஈடுபட்டுள்ளதாக வனத்துறையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து உளுந்தூர்பேட்டை வனச்சரகத்தை சேர்ந்த வீ.கிருஷ்ணாபுரம் பீட் வனக்காப்பாளர் வேல்முருகன் (28) அப்பகுதிக்கு சக ஊழியர்களுடன் சென்றுள்ளார். அப்போது அப்பகுதியில் ஒற்றை குழல் துப்பாக்கியை கொண்டு 2 பேர் மான் வேட்டையில் ஈடுபட்டிருந்தது தெரியவந்தது. அவர்களை வேல்முருகன் பிடிக்க முயன்றபோது இருதரப்புக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாக தெரிகிறது.

அப்போது வேட்டையில் ஈடுபட்டவர்கள் சின்னசேலம் பூண்டி கிராமத்தை சேர்ந்த பாலு என்ற பாலகிருஷ்ணன் (45), குரால் கிராமத்தை சேர்ந்த தொழிலாளி செல்லக்கண்ணு (43) என்பதும், பைக்கில் மான்களை வேட்டையாட வந்திருப்பதும் தெரியவந்தது. இதையடுத்து வனக்காப்பாளர் வேல்முருகன், செல்லக்கண்ணுவைபிடிக்கமுயன்றபோது பாலகிருஷ்ணன் தான் கையில் வைத்திருந்த துப்பாக்கியால் வேல்முருகனின் வலது குதிங்காலில் சுட்டதோடு, துப்பாக்கியை கீழே போட்டுவிட்டு தப்பி ஓடியுள்ளார். மற்றொருவரான செல்லக்கண்ணு என்னை பிடித்தால் துப்பாக்கியால் சுட்டு விடுவேன் என்று மிரட்டியுள்ளார். அப்போது வேல்முருகன் உள்ளிட்ட ஊழியர்கள் செல்லக்கண்ணுவை சுற்றிவளைத்து பிடித்து 2 பேரும் வைத்திருந்த பைக், துப்பாக்கி மற்றும் ஹெட்லைட் ஆகியவற்றை பறிமுதல் செய்து உளுந்தூர்பேட்டை வனச்சரக அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

பின்னர் சின்னசேலம் காவல் சரகத்திற்குட்பட்ட கீழ்குப்பம் காவல் நிலையத்தில் செல்லக்கண்ணு ஒப்படைக்கப்பட்டார். உளுந்தூர்பேட்டை வனச்சரக அலுவலர் ரவி, அளித்த புகாரின்பேரில் அனுமதியில்லாமல் நாட்டுத் துப்பாக்கி வைத்திருந்தது, துப்பாக்கியால் சுட்டு கொலை முயற்சியில் ஈடுபடுதல் உள்ளிட்ட பிரிவுகளின்கீழ் வழக்குப்பதிந்து செல்லக்கண்ணுவை கைது செய்தனர். மேலும் தப்பிஓடிய பாலகிருஷ்ணனை தேடி வருகின்றனர். இதனிடையே காயமடைந்த வேல்முருகன் கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தகவலறிந்த மாவட்ட வன அலுவலர் கார்த்தியாயினி சம்பவ இடத்தை பார்வையிட்டதோடு, வேல்முருகனிடம் உடல்நலம் விசாரித்தார்.

# ஆர்டிஐயில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்காத பொது தகவல் அலுவலருக்கு ரூ.25 ஆயிரம் அபராதம்: மாநில தகவல் ஆணையர் உத்தரவு

தேனி, மார்ச்.24

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்ட கேள்விக்கு உரிய பதில் அளிக்காத பொது தகவல் அலுவலருக்கு ரூ.25 ஆயிரம் அபராதம் விதிக்க உத்தரவிடப்பட்டது. தேனி மாவட்டம், போடியைச் சேர்ந்தவர் ராமகிருஷ்ணன், சமூக ஆர்வலர்.

இவர், போடி அருகே, மேலசொக்கநாதபுரத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலக வளாகத்திற்குள் உள்ள ஒரு வழிபாட்டுத்தலம், எந்த நிதியில் இருந்து கட்டப்பட்டது என்பது உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை கேட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் கடந்த 2021, ஜன.2ம் தேதி கிராம நிர்வாக அலுவல பொது தகவல் அலுவலருக்கு மனு அளித்தார். இம்மனுவிற்கு அப்போதைய பொது தகவல் அலுவலர் முறையாக பதில் அளிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. இதனையடுத்து, ராமகிருஷ்ணன் இதுகுறித்து மாநில தலைமை தகவல் ஆணையத்திற்கு மேல்முறையீடு செய்தார்.

அந்த மனு மீது மாநில தகவல் ஆணையர் தாமரைக்கண்ணன் விசாரணை நடத்தினார். இதில், விஏஓ அலுவலக வளாகத்திற்குள் வழிபாட்டுத்தலம் இருப்பின் அது யாரால் கட்டப்பட்டது என்ற விவரங்கள் பொது அதிகார அமைப்பிற்கு தெரிந்திருக்க வேண்டும்.

ஆகவே, போடி வட்டாட்சியர் இதுகுறித்து உரிய ஆவணங்களை பரிசீலித்து, அது பற்றிய உரிய பதிலை முறையீட்டாளருக்கு வழங்க வேண்டும். உரிய காலத்திற்குள்மனுதாரர்கோரிய தகவல்களை வழங்க மறுத்துள்ள பொது தகவல் அலுவலர் யார் என போடி வட்டாட்சியர் விசாரித்து, அவருக்கு தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் ரூ.25 ஆயிரம் அபராதம் விதிக்க வேண்டும்.

மேலும், காலதாமதம் செய்து மனஉளைச்சலை ஏற்படுத்தியதற்காக மனுதாரர்ராமகிருஷ்ணனுக்கு ரூ.5 ஆயிரம் இழப்பீடாக பொது தகவல் அலுவலர் வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

# சென்னை - மும்பை ஐபிஎல் போட்டி; மாநகர பேருந்துகளில் இலவச பயணம்: போக்குவரத்து கழகம் அறிவிப்பு



சென்னை, மார்ச்.24

சென்னை – மும்பை ஐபிஎல் போட்டியை காணவரும் பார்வையாளர்கள், போட்டிக்கான நுழைவுச் சீட்டை காண்பித்து மாநகர பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளலாம் என மாநகர் போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மா.போ.கழக மேலாண் இயக்குநர் வெளியிட்ட அறிக்கை: சென்னையில் ஐபிஎல்2025 கிரிக்கெட் போட்டி எம்ஏ சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் மார்ச் 23ம் தேதி முதல் நடைபெற உள்ளது. போட்டி நடைபெறும் நாள் அன்று போக்குவரத்து நெரிசலை குறைக்கும் விதமாகவும், பொது போக்குவரத்து பயன்பாட்டினை அதிகரிக்கும் விதமாகவும் சென்னைசூப்பர்கிங்ஸ் கிரிக்கெட் லிமிடெட் நிறுவனத்திடம் மா.போ.கழகம் உரிய பயணகட்டணம் பெற்றுக் கொண்டதன் அடிப்படையில், பயணிகள் கிரிக்கெட் போட்டிக்கான நுழைவுச் சீட்டு வைத்திருந்தால் அதை நடத்துனரிடம் காண்பித்து மா.போ. கழக பேருந்துகளில் (குளிர்சாதன பேருந்து நீங்கலாக) போட்டி நடைபெறும் நேரத்திற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்பும், போட்டி முடிந்த பின்னர் மூன்று மணி நேரத்திற்கும் மா.போ.கழகப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

மா.போ.கழகம் IPL – 2025 கிரிக்கெட் போட்டிக்கு சிறப்பு பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்துள்ளது.

சென்னையின் பல்வேறு பகுதிகளிலிருந்து பார்வையாளர்கள் மாநகர் பேருந்துகளில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிக்கான நுழைவுச் சீட்டை காண்பித்து பயணிக்கலாம். பல பேருந்துகளை பயன்படுத்தி மைதானத்திற்கு பயணம் மேற்கொள்ளலாம். பார்வையாளர்களின் வசதிக்காக போட்டி முடிந்த பின்பு, தமது இருப்பிடம் செல்ல ஏதுவாக மாநகர போக்குவரத்துக் கழகம் அண்ணாசதுக்கம் பேருந்து நிலையம், சென்னை பல்கலைக்கழகப் பேருந்து நிறுத்தம், அண்ணாசாலை ஓமந்தூரார் மருத்துவமனை அருகில் உள்ளிட்ட இடங்களிலிருந்து பேருந்துகளை இயக்கிட சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இடங்கள் எம்.ஏ.சிதம்பரம் கிரிக்கெட் மைதானத்தில் இருந்து500மீட்டருக்குள் உள்ளது. மேலும், அண்ணாசாலையில் உள்ள அண்ணாசிலை முதல் எம்.ஏ.சிதம்பரம் கிரிக்கெட் மைதானம் வரை மா.போ.கழக சிற்றுந்துகளும் இயக்கப்பட உள்ளது.

எனவே, பார்வையாளர்கள் இப்பேருந்து இயக்கத்தினை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

24.3.2025

# விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் முதலமைச்சர் பிறந்தநாள் விழா




விழுப்புரம் தெற்கு மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியத்தில் இராதாபுரம் மற்றும் சிந்தாமணி ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்றதுவிழ ா வி ல் விழுப்புரம்தெற்குமாவட்ட செயலாளர் டாக்டர்_ பொன்_கௌதமசிகாமணி அவர்கள் கலந்துகொண்டு சபரிமுத்து அவர்களின் ஏற்பாட்டில் மார்ச் 1ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் அன்று பிறந்த 4 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மகளிர்க்கு நலத்திட்ட உதவிகள் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் அன்னதானம் வ ழ ங் கி ன ா ர் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் A.சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன் ஒன்றிய செயலாளர்கள் ஜெய.ரவிதுரை வேம்பி ஜெ.ரவி ஜெயபால் ஒன்றிய குழு தலைவர் ர.சங்கிதாஅரசி, ஒன்றிய குழு துணை தலைவர்ர.ஜீவிதாமாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மீனா வெங்கடேசன், பேரூராட்சி துணை தலைவர் ச. பாலாஜி, இராதாபுரம் நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதி தன்ராஜ், ஒன்றிய கவுன்சிலர் செந்தில், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் வெங்கடேசன், மு. மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ராஜசேகர், ஒன்றிய விவசாய அணிதுணைஅமைப்பாளர் பாபு, கிளைச் செயலாளர்கள் அருண், சரவணன், கருணாநிதி, ஊராட்சி மன்ற தலைவர் பொற்கலை பாபு மற்றும் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கிளைச் செயலாளர்கள் மற்றும் உள்ளிட்டபலர்உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டம் நம்பியூர் ஒன்றிய கழக அலுவலகம் இளைஞரணி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பாக நடைபெற்ற சமூக வலைதள பயிற்சி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது பேரூராட்சி மன்ற தலைவர் மெடிக்கல் பா செந்தில் குமார் அவர்கள் ஈரோடு வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருவேங்கடம் அவர்கள் மற்றும் துணை அமைப்பாளர் கார்த்திகேயன் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் செந்தில்குமார் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் மைக் பழனிச்சாமி வேலுச்சாமி மற்றும் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ராஜ்குமார் மற்றும கோபி சட்டமன்ற ஒருங்கிணைப்பாளர் பூர்ண சந்திரன் இளைஞர் அணி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்

# ரூ.951.27 கோடி வரி ஏய்ப்பு போலி பட்டியல் வணிகர்கள் 318 பேர் கண்டுபிடிப்பு

சென்னை,மார்ச்.24

318 போலி பட்டியல் வணிகர்கள், ரூ.951.27 கோடி வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டு 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வணிகவரித்துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து வெளியிட்ட அறிக்கை: வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி மாதாந்திர இணை ஆணையர்கள் அளவிளான ஆய்வுக் கூட்டங்களில் நியாயமாக வணிகம் செய்யும் வணிகர்களின் நலனை கருத்தில் கொண்டு, போலி பட்டியல் வணிகர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள தொடர்ந்து அறிவுறுத்திய தின்பேரில், கடந்த ஆண்டு மார்ச் 14ம் மற்றும் ஜூலை 2ம் தேதிகளில் வணிகவரி ஆணையரின் உத்தரவின்படி முதல் மற்றும் இரண்டாவது மாநில அளவிலான திடீர் செயலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதனை தொடர்ந்து, கடந்த 12ம் தேதி மூன்றாம் முறையாக மாநிலம் முழுவதும் தமிழ்நாடு வணி க வ ரி த் து  றை யின் நுண்ணறிவுப் பிரிவின் மூலம் சீரியமுறையில் திட்டமிடப்பட்ட திடீர் செயலாக்க தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 318 போலி பட்டியல் வணிகர்கள், ரூபாய் 951.27 கோடி வரி ஏய்ப்பு செய்தது கண்டறியப்பட்டது. குறிப்பாக, திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கிவரும் திருவா. மெட்ரோ எண்டர்பிரைசஸ் என்ற வணிக நிறுவனத்தை சென்னை2 நுண்ணறிவுக் கோட்டப் பிரிவினர் ஆய்வு செய்து, ரூபாய் 12.46 கோடி அளவில் உள்ளீட்டு வரி போலியாக துய்த்து,

அரசுக்கு வரி இழப்பு ஏற்படுத்தியதை கண்டறிந்து, அதன் உரிமையாளர்கள் ஜெயபிரகாஷ் மற்றும் பஷீர் அகமது ஆகியோரை கடந்த 21ம் தேதி கைது செய்து, நீதிமன்ற உத்தரவின்படி சிறையில் அடைத்துள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் ஆம்புலன்ஸ்லே பிறந்த குழந்தை பிரசவ வலியால் துடித்த தேவகோட்டை பகுதியைச் சேர்ந்த கார்த்திகா வயது 27 என்ற நிறைமாத கர்ப்பிணிக்கு ஆம்புலன்ஸிலேயே அழகான ஆண் குழந்தை ஆம்புலன்ஸ் ஓட்டுநர்மற்றும் பிரசவ உதவியாளருக்கு குவியும் பாராட்டுக்கள் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுகா கண்டியூர் கிராமத்தைச் சேர்ந்த சுந்தர் மூர்த்தி மனைவிநிறைமாத கர்ப்பிணி கார்த்திகா 27 கன்னங்குடி அரசு ஆரம்ப அரசு நிலையம்மருத்துவபரிசோதனைமேற்கொண்டனர்பின்னர் 108 ஆம்புலன்ஸில் காரைக்குடி சுரக்குடி அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர் செல்லும் வழியில் பெண்ணுக்கு பிரசவ வலி ஏற்பட்டது தச்சவயல் என்ற இடத்தில் அழகான ஆண் குழந்தை பிறந்ததுஓட்டுநர் மருதுபாண்டியன் மருத்துவ உதவியாளர் சங்கீதா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்




சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டம் புதுவயல் உள்ள ஸ்ரீ கலைமகள் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு பள்ளி சார்பாக விழிப்புணர்வு பேரணியும் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடைபெற்றது விழிப்புணர்வு பேரணியானது மாலை 4:30 மணி அளவில் புதுவயல் பேரூராட்சி அலுவலகத்தில் துவங்கி முக்கிய சாலையில் வழியாக மாலை 5 மணி அளவில் புதுவையில் பேருந்து நிலையத்தில் வந்தடைந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடையில் விழிப்புணர் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன விழாவில் புதுவயல் பேரூராட்சி மன்ற தலைவர் திரு முகமது மீரா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பு செய்தார் சாக்க வயல் ஊராட்சி முன்னாள் தலைவர் திரு சி சின்னையா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்பள்ளிதாளாளர்5ம்முதல்வருமான திரு கே ஆர் பரமேஸ்வரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார் பள்ளி துணை முதல்வர் எம் பூபதி ராஜா நன்றியுரை வழங்கினார் விழாவிற்கு பள்ளி ஆசிரியர் ஆசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்

# மணிமுத்தாறு அருவியில் சுற்றுலா பயணிகளுக்கு தடை

திருநெல்வேலி, மார்ச்.24

நெல்லை மாவட்டம் அம்பை அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள மணிமுத்தாறு அருவி மிகவும் பிரசித்தி பெற்றதாகும். ஆண்டு முழுவதும் தண்ணீர் விழும் இந்த அருவியில் ஏராளமான சுற்றுலாபயணிகள்உற்சாகமாக குளித்து மகிழ்வது வழக்கம்.

இந்த நிலையில், நெல்லை மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் கனமழை காரணமாக மணிமுத்தாறு அருவிக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி அருவியில் குளிக்க தடை விதித்து வனத்துறை உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக அம்பாசமுத்திரம் புலிகள் காப்பகம் துணை இயக்குநர்/ வன உயிரின காப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் அம்பாசமுத்திரம் வனக்கோட்டம் அம்பாசமுத்திரம் வனச்சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் பாதுகாப்பு கருதி மணிமுத்தாறு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க மற்றும் பார்வையிட தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன்படி கோவை, நெல்லை, ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, தென்காசி, ராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கஜினி 2 படத்தின் அப்டேட்டை பகிர்ந்த ஏ.ஆர்.முருகதாஸ்



ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சூர்யா நடிப்பில் கடந்த 2005ம் ஆண்டு வெளியான படம் 'கஜினி'. இந்த படத்தில் அசின், நயன்தாரா,ரியாஸ்கான்உள்ளிட்டோர்முக்கியகதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இப்படம் மாபெரும் வரவேற்பை பெற்றது. அதனை தொடர்ந்து அமீர்கான் நடிக்க 2008ம் ஆண்டு இந்தியில் ரீமேக் செய்யப்பட்டது. அதையும் ஏ.ஆர்.முருகதாஸே இயக்கி இருந்தார். இரண்டுமே மாபெரும் வரவேற்பை பெற்றது. இதற்கிடையில்கஜினி படத்தின் 2 பாகம் விரைவில் வெளியாகும் என்று நடிகர் சூர்யா தெரிவித்திருந்தார். இதனால் படத்தை எதிர்பார்த்து ரசிகர்கள் காத்திருந்தனர்.

இதற்கிடையில், இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ் சல்மான் கானை வைத்து 'சிக்கந்தர்' என்ற படத்தை இயக்கியுள்ளார். இப்படம்வருகிற30ந்தேதிவெளியாகஉள்ளது.இப்படத்திற்கான புரமோஷன் நிகழ்ச்சியின் போது ஏ.ஆர்.முருகதாஸிடன் 'கஜினி 2' படம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது.

அதற்குபதிலளித்தஏ.ஆர்.முருகதாஸ், "எனக்குசிலயோசனைகள்உள்ளன.நாங்கள்அனைவருமேஅவர்அவர்களுடைய படங்களில் மும்முரமாக இருக்கிறோம். சரியனா நேரம் அமையும்போது இதுகுறித்து பேசி முடிவு செய்வோம். தயாரிப்பாளர் அல்லு அரவிந்த கஜினி 2 படத்தினை தயாரிக்க முனைப்புடன் இருக்கிறார். 'கஜினி 2' படத்தினை ஒரே சமயத்தில் தமிழ் மற்றும் இந்தியில் உருவாக்கவுள்ளோம். இந்தப் பேச்சுவார்த்தை ஆரம்பகட்ட நிலையில் உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

# விஜய்யுடன் இணைந்து நடிக்க ஆசை "டிராகன்" பட நடிகை



அசாம் மாநிலம் தேஜ்பூரை சேர்ந்தவர் கயாடு லோஹர். இவர் கடந்த 2021ம் ஆண்டு மனோரஞ்சன் நடிப்பில் வெளியான 'முகில்பேட்டை' என்ற கன்னட படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார். தொடர்ந்து, 2022ம் ஆண்டு வெளியான ஸ்ரீ விஷ்ணு நடித்த 'அல்லூரி' மூலம் தெலுங்கில் அறிமுகமானார். இதன்பின்னர் ஒரு மராத்தி மற்றும் மலையாளப் படத்தில் நடித்திருக்கிறார். கடந்தபிப்ரவரி21ம்தேதிபிரதீப்ரங்கநாதன்நடிப்பிலும்அஸ்வத்மாரிமுத்துவின் இயக்கத்திலும் வெளியான திரைப்படம் தான் 'டிராகன்'. டிராகன் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான இவர் சமூக வலைதளங்களில் அதிகம் தேடும் நடிகையாக மாறிவிட்டார்.

தற்போது கயாடு, 'இதயம் முரளி' படத்தில் அதர்வாவுக்கு ஜோடியாக நடித்து வருகிறார். அடுத்ததாக அவர் தெலுங்கு பட இயக்குனர் கே.வி.அனுதீப்பின் 'பங்கி' படத்தில் நடிக்க உள்ளார். அவருக்கு மேலும் பட வாய்ப்புகள் குறைந்த வண்ணம் உள்ளது.

நாமக்கல் தனியார் கல்லூரியில் 25ம் ஆண்டு ஆண்டு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சமீபத்தில் வெளியான டிராகன் படத்தில் நடித்த கதாநாயகி கயாடு லோஹர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றார் . மேலும் சின்னத்திரை நடிகர்கள் கீர்த்தி, விஜய், சின்னத்திரை பாடகர்கள் அரவிந்த் ஸ்ரீனிவாஸ், பிரியா ஜெர்சன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கூடியிருந்த மாணவ மாணவியர் மத்தியில் பேசிய கயாடு லோஹர் தமிழ் சினிமாவில் யாருடன் நடிக்க ஆசைப்படுகிறீர்கள் என்ற கேள்விக்கு நடிகர் விஜய் உடன் நடிக்க விரும்புவதாக தெரிவித்தார். மேலும் நடிகர் சிம்பு சாதாரண நடிகர் இல்லை எனவும், அவருக்கு நடிப்பில் பல பரிமாண முகங்கள் உள்ளது எனவும் தெரிவித்தார்.

# அதிக சம்பளம் பெறும் நடிகர்கள்.... பட்டியலில் முதலிடம் யார் தெரியுமா?

இந்தியாவில் அதிகம் சம்பாதிக்கும் நடிகர்களின் பட்டியலில் தென்னிந்திய நடிகர்கள் முன்னணியில் இருப்பது போர்ப்ஸ் இந்தியா மூலம் தெரியவந்துள்ளது.

போர்ப்ஸ் இந்தியா வெளியிட்ட தகவல்படி, படம் ஒன்றுக்கு 300 கோடி ரூபாய் வரை சம்பளம் பெறும் தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுன், சம்பள பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

முதல் இடம் அல்லு அர்ஜுன் ரூ300 கோடி 2வது இடம் விஜய் ரூ130 கோடி முதல் ரூ275 கோடி 3வது இடம் ஷாருக் கான் ரூ150 கோடி முதல் ரூ250 கோடி 4வது இடம் ரஜினிகாந்த் ரூ125 கோடி முதல் ரூ270 கோடி 5வது இடம் அமீர் கான் ரூ100 கோடி முதல் ரூ275 கோடி 6வது இடம் பிரபாஸ் ரூ100 கோடி முதல் ரூ200 கோடி 7வது இடம் அஜித் குமார் ரூ105 கோடி முதல் ரூ165 கோடி 8, 9வது இடம் சல்மான் கான் மற்றும் கமல்ஹாசன் ரூ100 கோடி முதல் ரூ150 கோடி 10வது இடம் அக்சய் குமார் ரூ60 கோடி முதல் ரூ145 கோட

# ஐ.பி.எல். தொடக்க விழா; ஷாருக்கானுடன் நடனம் ஆடிய விராட், ரிங்கு சிங்




இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல். தொடரின் 18வதுசீசன்இன்றுதொடங்கியது.இன்றுநடைபெற்று வரும் தொடக்க லீக் ஆட்டத்தில் கொல்கத்தா பெங்களூரு அணிகள் ஆடி வருகின்றன. இந்த ஆட்டம் தொடங்குவதற்கு முன்னர் தொடக்க விழா நடைபெற்றது. இதில் ஷ்ரேயா கோஷல் பாடல்கள் பாடி அசத்தினார். இஷா பதானி கவர்ச்சி நடனம் ஆடினார். அதன்பின் ஷாருக்கான் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஆர்.சி.பி அணிக்காக 18 வருடங்கள் தொடர்ந்து விளையாடி வரும் விராட் கோலியை புகழந்து பேசினார். அப்போது கிங் ஆப் கிரிக்கெட், கோட் என விராட் கோலியை பாராட்டு வரவேற்றார். அதற்கு விராட் கோலி நன்றி தெரிவித்தார். பின்னர் விராட் கோலி மற்றும் ரிங்கு சிங் உடன் ஷாரூக் கான் சற்று நேரம் உரையாடினார். விராட் கோலியை கோல்டன் தலைமுறை எனவும், ரிங்கு சிங்கை இளம் தலைமுறை எனவும் ஷாருக்கு கூறினார்.

பின்னர் இருவருடனும் ஷாருக் கான் நடனம் ஆடினார். ஷாருக்கான் உடன் விராட் கோலியும், ரிங்கு சிங்கும் சேர்ந்து ஆடினர். பி.சி.சி.ஐ தலைவர் ரோஜர் பின்னி, விராட் கோலிக்கு 18 வருடமாக ஆர்.சி.பி அணிக்காக விளையாடுவதை கவுரவப்படுத்தும் வகையில் நினைவுப் பரிசு வழங்கினார். நிகழ்ச்சி முடிவில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

# சுவிஸ் ஓபன் பேட்மிண்டன்: காலிறுதியில் தோல்வி கண்ட தமிழக வீரர்

சுவிட்சர்லாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டி பாசெல் நகரில் நடைபெற்று வருகிறது. வரும் 23ம் தேதி வரை இத்தொடர் நடக்கிறது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளார்கள்.

இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் தமிழக வீரர் சங்கர் சுப்ரமணியன், பிரான்சை சேர்ந்த சி.போபோவ்வுடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சி.போபோவ் 2110, 2114 என்ற செட் கணக்கில் சங்கர் சுப்ரமணியனை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

# ஐபிஎல்: ரஹானே அரைசதம்...பெங்களூரு அணிக்கு 175 ரன்கள் இலக்கு நிர்ணயித்த கொல்கத்தா

இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல். தொடரின் 18வது சீசன் இன்று தொடங்கியது. கடந்த 2008ம் ஆண்டு பி.சி.சி.ஐ. சார்பில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த தொடர் 18வது ஆண்டாக வீறுநடை போடுகிறது. இந்த நிலையில் 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா இன்று கலை நிகழ்ச்சிகளுடன் தொடங்கியது. முதல் நாளான இன்றிரவு கொல்கத்தா ஈடன்கார்டனில் அரங்கேறும் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, பெங்களூரு ராயல் சேலஞ்சர்சை சந்தித்தது. இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற பெங்களூரு அணியின் கேப்டன் ரஜத் படிதார் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி கொல்கத்தா அணி முதலில் பேட்டிங் செய்தது.

தொடக்க வீரர்களாக சுனில் நரைன், டி காக் களமிறங்கினர் தொடக்கத்தில் டி காக் 4 ரன்களில் வெளியேறினார். தொடர்ந்து ரஹானே சிறப்பாக விளையாடினார் ரஹானே சுனில் நரைன் இருவரும் இணைந்து அதிரடி காட்டினர். ரஹானே அரைசதம் அடித்து 56 ரன்களில் வெளியேறினார். நரைன் 44 ரன்களில் வெளியேறினார் தொடர்ந்து ரிங்கு சிங் 12 ரன்கள், ரசல் 4 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் கொல்கத்தா அணி 8விக்கெட் இழப்பிற்கு 174ரன்கள் எடுத்தது. பெங்களூரு சார்பில் குருனால் பாண்டியா 3விக்கெட் வீழ்த்தினார் தொடர்ந்து 175 ரன்கள் இலக்குடன் பெங்களூரு அணி விளையாடுகிறது

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tirppur - 638751. Editor: KANI RAJA V.